பாதுகாப்புத் துறையை வலுப்படுத்த,

# ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளதா?

## மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி?



புதுடெல்லி, பிப்.5-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் மக்களவையில், பாதுப்புத் துறையை மேம்படுத்த ஒன்றிய அரசிடம் ஏதேனும் செயலாக் கட்டங்கள் உள்ளனவா? என்றும், பாதுகாப்புத் துறையில் ஆராய்ச்சியை வலுப்படுத்தவும், நாட்டின் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை பெருக்கவும் ஒன்றிய அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்றும், அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்று ஒன்றிய அரசின் பாதுகாப்புத்துறை இணையமைச்சர், அஜய் பட் அவர்களிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் பாதுகாப்புத்துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு:

தனியார் மற்றும் அரசுத் துறைகளின் மூலம் பாதுகாப்புத் துறையில் தளவாடங்களை கொள்முதல் செய்யும் வகையில், பாதுகாப்பு தளவாடங்கள் கொள்முதல் நெறிமுறைகள் 2020 வகுக்கப்பட்டுள்ளன என்றும், சிறப்புத் திட்டங்களின் வாயிலாக பாது காப்பு துறைக்கு தேவையான தளவாடங்களை பரிசோதனை செய்யவும், கொள் முதல் செய்யும் புதிய தளவாடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும், உத்தர் பிரதேச பாதுகாப்பு தளவாடங்கள் தொழிற்சாலை வளாகங்கள், தமிழ்நாடு பாதுகாப்பு தளவாடங்கள் தொழிற்சாலை வளாகங்கள் என்று இரு பெரும் வளாகங்களை ஒன்றிய அரசு ஏற்படுத்த பாதுகாப்பு துறைக்கு தேவையான உற்பத்தியை பெருக்க ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்றும் இணையமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

மேலும், பாதுகாப்பு தளவாட சோதனைகளின் கட்டமைப்பை அதிகப்படுத்தவும், விமானப்படை தயாரிப்புகளை மேம்படுத்தவும் தேவையான சோதனை சாலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், சிறு குறு தொழிற்சாலைகளின் உதவியுடன் புத்தாக்க நிறுவனங்களை பாதுகாப்பு துறைக்கு தேவையான தளவாடங்கள் உற்பத்தியில் ஈடுபடுத்தவும் அரசு முயற்சிகள் எடுத்து வருவதாகவும், இந்திய தொழில்நுட்ப நிறுவனம், இந்திய அறிவியல் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து பாதுகாப்பு துறைக்கு தேவையான ஆராய்ச்சிகளை மேம்படுத்தவும், தேவையான திட்டங்களை அரசு ஏற்படுத்தியுள்ளது என்றும்,

தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியத்தின் உதவியுடன், தயாரிப்பு நிறுவனங்களுக்கு தேவையான நிதிச் சலுகையை அரசு வழங்கி வருவதாகவும், 15-க்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட்டு இளைஞர்களுக்கு ஆராய்ச்சியில் ஈடுபட பாதுகாப்பு துறை மேற்கொண்டு வருவதாக ஒன்றிய அரசின் பாதுகாப்புத்துறை இணையமைச்சர், அஜய் பட், டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதில் அளித்துள்ளார்.






கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று திட்டக்குடி முதல் நைனார்பாளையம் வரை புதிய வழித்தடத்தில் பேருந்தை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் கொடியசைத்து துவக்கி வைத்தார். இதில் திட்டக்குடி நகர கழகச் செயலாளர் நகர மன்ற துணைத் தலைவர் வி.பி. பி.பரமகுரு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

35 ஆண்டுகளுக்கு மேல் முடியாத பட்டா மாற்றம்!

# மூன்றே நாளில் முடித்து வைத்தது மக்களுடன் முதல்வர் திட்டம்!

## அளவிலா ஆனந்தத்தில் விவசாயி சந்திரசேகரன்!







தஞ்சை, பிப்.5-

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் வட்டம், வலையப்பேட்டை வருவாய் கிராமம், மாங்குடியில் வசிப்பவர் முத்தையன் மகன் சந்திரசேகரன். இவர் ஒரு பரம்பரை விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். மாங்குடி கிராமத்தைச் சேர்ந்த மாரிமுத்து அவர்களிடம் 1988-ஆம் ஆண்டில் புல எண்.32 உட்பிரிவு 9சி; இதில் 7 ஏர்ஸ், அதாவது, 21 செண்ட் நிலத்தைக் கிரயம் வாங்கினார்.

இந்த நிலத்திற்கு பட்டா மாற்றம் செய்திட சந்திரசேகரன் பல ஆண்டுகளாக முயன்றும் பட்டா மாற்றம் நடைபெறவில்லை.

முந்தைய ஆட்சியில் 18-4-2018 அன்று மக்கள் நேர் காணல் முகாம் வலையப்பேட்டை வருவாய் கிராமம், மாங்குடியில் நடைபெற்றது. அம்முகாமில் கலந்து கொண்ட விவசாயி சந்திரசேகரன் இந்த நிலத்திற்குப் பட்டா மாற்றம் கோரி மனு கொடுத்தார். (மனு எண்.84, நாள் 18-4-2018 )

நீண்டகாலமாக பட்டா மாற்றம் கிடைக்கப்பெறாத நிலையில் தற்போது விவசாயி சந்திரசேகரன் அண்மையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மக்கள் குறை தீர்க்கும் திட்டமாக, "மக்களுடன் முதல்வர்" எனும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி, ஒவ்வொரு கிராமத்திலும், அந்தந்த வட்டார தாசில்தார் தலைமையில் முகாம் நடத்தி மக்கள் குறைகளைக் கேட்டுத் தீர்வு காணுமாறு அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கினார். அத்திட்டத்தின்படி இலட்சக்கணக்கான மக்களின் கோரிக்கைகள் நிறைவேறி மக்கள் இந்த அரசைப் பாராட்டி வருகின்றனர்.

மக்களுடன் முதல்வர் திட்டத்தின்படி, கும்பகோணம் தாசில்தாரர் அலுவலகத்திலிருந்து வலையப்பேட்டை வருவாய் கிராமத்தைச் சேர்ந்த மாங்குடி கிராமத்திலுள்ள சமூகக் கூடத்தில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் 20-12-2023 அன்று நடைபெற்றது.

இந்த முகாமிற்கும் உரிய ஆவணங்களுடன் சென்று சந்திரசேகரன் பட்டா மாற்றம் கோரி விண்ணப்பம் செய்தார். அந்த விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு 2-1-2024 அன்று சந்திரசேகரனுக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டு கும்பகோணம் வட்டாட்சியர் அலுவலகத்தின் இணைய சேவை மூலம் வெளியிடப்பட்டது.

பட்டா மாற்றம் தனக்குக் கிடைத்த செய்தியை இணையத்தின் மூலம் அறிந்து அளவிலா ஆனந்தம் அடைந்தார் விவசாயி சந்திரசேகரன்.

அந்த ஆனந்தத்துடன் இந்த மாற்றத்திற்குக் காரணமான மக்களுடன் முதல்வர் திட்டத்தையும் - முதலமைச்சர் அவர்களையும் நினைந்து நினைந்து வாழ்க வாழ்க என வாழ்த்திக் கொண்டிருக்கிறார் விவசாயி சந்திரசேகரன்.

